பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 15 செவ்வாய்க்கிழமை 01.10.2024 கதிர் 328

### இது ரகசியம் அல்ல!

நடிகர்கள் கவுண்டமணி, செந்திலின் சொப்பனசுந்தரி நகைச்சுவைதமிழ்அரசியலில்அடிக்கடி வந்துபோகும். கரகாட்டக்காரன் படத்தில் 'மக்கர்' பண்ணும் ☞ 2

# பேரவை, பொதுச் சபை கருத்தாணைகளுடன் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு களத்தில்

## நாடாளுமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டி




கோட்பாட்டுத் தளத்தில் தமிழ் மக்கள் பேரவை, தமிழ் மக்கள் பொதுச் சபை என்பவற்றின் கருத்தாணைகளைத் தமிழ்த் தேசிய அரசியல் சித்தாந்தமாக ஏற்றுக்கொண்டு 2024 நாடாளுமன்றத் தேர்தலில்தனித்துப்போட்டியிடப்போவதாக ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு நேற்று அறிவித்துள்ளது. திங்கட்கிழமை மாலை யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த தமிழர் கட்டமைப்புப் பிரதிநிதிகள் இதனை அறிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது:

இன்று தமிழ் தேசிய களத்தில் தூய்மையான மாற்றத்திற்கான மனிதர்களை மக்கள் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்திற்கு அனுப்ப தமிழ் மக்கள் விரும்புகின்றனர். இளையவர்களும் பெண்களும் நிபுணர்களும் இந்த குழுமத்தில் கணிசமான எண்ணிக்கையில் இருக்க விரும்புகின்றனர். அதேநேரம் தமிழ் தேசியஇனம்தன்உரிமைகளைஇன்னும் இத்தீவில் பெற்றுக் கொள்ளாத நிலையில் தியாகவேள்வியைகடந்து இனஅழிப்புக்குஉள்ளாகி பரிகாரநீதியையும்நிரந்திர சமஷ்டிஅடிப்படையிலான தீர்வையும்கோரிநிற்கின்ற சூழலில்கட்சிஅரசியலைத் தாண்டிதமிழ்த் தேசியக் கொள்கை அரசியல் தளமே முன்னெடுக்கப் படவேண்டும்என ☞ 8

## நாடாளுமன்றத் தேர்தலில் விக்கி கட்சி தனித்துப் போட்டி

2024 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டணி தனித்துப் போட்டியிடும் என்றுதமிழ்மக்கள்கூட்டணியின்செயலாளர் நாயகம் சி.வி.விக்னேஸ்வரன் அறிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். ☞ 2

## ஜனநாயகக் கூட்டணி தேர்தலில் சங்குச் சின்னத்திலேயே போட்டி

### ரெலோவின் செயலாளர் திட்டவட்டம்

நாடாளுமன்றத் தேர்தலில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சங்குச் சின்னத்திலேயே போட்டியிடும் என்று தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு கடந்த 26ஆம் திகதி நடைபெற்ற ☞ 2

# 13ஐ அமுல்படுத்த இந்தியா அநுரவிடமும் வலியுறுத்தும்

## தூதர் சந்தோஷ் ஜா தமிழ் தலைவர்களிடம் உறுதி

அரசமைப்பின்13ஆவதுதிருத்தச்சட்டத்தை முழுமையாகநடைமுறைப்படுத்துமாறுபுதிய ஆளும் தரப்பிடமும் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவிடமும் இந்தியா வலியுறுத்தும் என்று கொழும்பிலுள்ள இந்தியத் தூதர் சந்தோஷ்ஜாதெரிவித்தார்.நேற்றுத்தன்னைச் சந்தித்த தமிழ் கட்சிகளின் தலைவர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்திய உயர்ஆணையர் சந்தோஷ் ஜாவுக்கும், தமிழ்த் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று கொழும்பில் உள்ள இந்திய இல்லத்தில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் தமிழ்த் தலைவர்கள் சார்பில் மாவை.சேனாதிராஜா, சிவஞானம் சிறீதரன், மருத்துவர் சத்தியலிங்கம், சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் பற்கேற்றனர்.

இலங்கையில் ஆட்சி மாற்றத்தின் பின்னரான நிலைமைகள், சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் தமிழ்த் தலைவர்களிடம் இருந்து பொதுப்படையாகக் கேட்டு அறிந்துகொண்டார்.

புதிய ஜனாதிபதி அநுரகுமார ☞ 2

## எரிபொருள் விலை நள்ளிரவு குறைப்பு

மாதாந்த விலைசூத்திரத்தின் பிரகாரம், திங்கட்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருள் விலையில் திருத்தம் செய்ய இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, ஒக்டேன் 92 பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 21 ☞ 8

## வாக்காளர் டாப்பை பார்வையிடலாம்

நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்கவுள்ள வாக்காளர்களின் வாக்காளர் இடாப்புகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடங்கள் தொடர்பில் தேர்தல் ☞ 8

### ஆளும்தரப்பு தொடர்பான தனது கருத்தில்

## அவமானப்படுத்தும் நோக்கம் இல்லை

### சந்திரிகா அறிவிப்பு

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தது தொடர்பில் தான் தெரிவித்த கருத்து அவமானப்படுத்தும் நோக்கத்துடன் சொல்லப் பட்டதல்ல என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். தேசிய ☞ 8



## காலி முகத்திடலில் வாகனங்கள் நிறுத்தப்பட்டது காட்சிக்காக அல்ல

### ஜனாதிபதி செயலகம் விளகம்

தற்போது ஜனாதிபதி செயலகத்திற்கு அண்மித்த வளாகத்தில் காலி முகத் திடலில் நிறுத்தப்பட்டுள்ள வாகனங்கள் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருவது தொடர்பில் ஜனாதிபதி செயலகம் கவனம் செலுத்தியுள்ளதாக, ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஊடக அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

புதியஜனாதிபதியின்நியமனத்துடன் கடந்த சில தினங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்ட 107 வாகனங்கள் தற்காலிகமாக பொலிஸ் பாதுகாப்பில் ஜனாதிபதி ☞ 2

## தேசியப் பட்டியல் எம்.பி. பதவி அரியத்தாருக்கு தரவேண்டும்

### ஜனநாயகப் போராளிகள் வலியுறுத்து

நாடாளுமன்றபொதுத்தேர்தலில் தமிழ் பொதுக் கட்டமைப்பாகப் போட்டியிடுகின்ற நாம் பெற்றுக் கொள்ளும் முதலாவது தேசியபட்டியல்உறுப்புரிமையினை பா.அரியநேந்திரனுக்குவழங்குவதே அரசியல் அறமாகும் என்று ஜனநாயகப் போராளிகள் ☞ 2

## பங்காளிகள் திரும்பி வராவிடின் தமிழ் அரசு தனித்தே போட்டி

### மன்னாரில் சுமந்திரன் அறிவிப்பு

தமிழ் அரசுக் கட்சியின் அழைப்பைஏற்றுகூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் திரும்ப வராவிட்டால் 2024 நாடாளு மன்றத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சிதனித்துப்போட்டியிடும்என்று கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று செய்தியாளர்களிடம்பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஏற்கனவே தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்த கட்சிகள் அனைவரையும் மீண்டும் வருமாறு அழைப்பதாகவும் இலங்கை தமிழ அரசுக் கட்சியின் பெயரிலும் தமிழரசு கட்சியின் சின்னத்திலும் தேர்தலில் போட்டியிடுவதற்கும் அழைப்பு விடுப்பதாகவும் மத்திய செயற்குழுவில் தீர்மானித்து இருந்தோம். அப்படி அவர்கள் வரா விட்டால் இலங்கை தமிழ் அரசுக் கட்சி தனித்து போட்டியிடுவதாகவும் ஏற்கனவே தீர்மானம் எடுத்திருந்தோம்.

வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வதற்கு இன்னும் சிறிது காலமே இருப்பதால் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

காரைத் தள்ளிக்கொண்டு செல்லும்போது திடீரென செந்திலின் கன்னத்தைப் பொத்தி அறையும் கவுண்டமணி ''என்னைப் பார்த்து ஏண்டா அந்தக் கேள்வி கேட்டாய்'' என்பார். செந்தில் கேட்ட அந்தக் கேள்வி என்னவென்றால், சொப்பன சுந்தரியின் காரை நாம் வைத்திரக்கின்றோம் சொப்பன சுந்தரியை யார் வைத்திருக்கிறார்கள் என்பதாக இருக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைந்தபோதும் இந்தச் சொப்பன சுந்தரி விவகாரம் வந்தது. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கூட்டமைப்பாகப் போட்டியிடுவதில்லை என்று தீர்மானம் என்று தமிழ் அரசுக் கட்சி அறிவிக்க, இல்லை நாங்கள்தான்கூட்டமைப்புஎன்றுஆங்கிலத்தில் ஒரே மாதிரியான பெயர் வரக்கூடியதான ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் (டி.ரி.என்.ஏ.) பெயரில் முன்னாள் உள்ள டி என்ற எழுத்தை மிகச் சின்னதாக்கிப் போட்டு தாம் தான் ரி.என்.ஏ. என்று காட்ட முற்பட்டன ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எவ் போன்ற கட்சிகள்.

இப்போது மீண்டும் அதேபோன்று தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பை யார் வைத்திருக்கிறார்கள் என்கிற பிரச்சினை வந்திருக்கிறது. சிவில் அமைப்புக்களின் அமைப்பு என்று சொல்லப்பட்ட தமிழ் மக்கள் பொதுச்சபையும் 7 தமிழ் அரசியல் கட்சிகளும் சம அந்தஸ்தோடு இணைந்து இந்தப் பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அந்த அமைப்பு சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு வேட்பாளரும் நிறுத்தப்பட்டார். தமிழ் பொது வேட்பாளர் என்று அறியப்பட்ட அரிநேத்திரனே அந்த வேட்பாளர்.

அதன் பின்னர் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பில் அரைப் பங்கைத் தன்வசம் வைத்திருக்கும் தமிழ் மக்கள் பொதுச் சபை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதில்லை, தேர்தல் அரசியலில் பங்கேற்பதும் இல்லை என்று முடிவெடுத்தது. அதனால் பொதுக் கட்டமைப்பின் சங்குச் சின்னத்தை 2024 நாடாளுமன்றத் தேர்தலில் பயன்படுத்தவேண்டாம் என்று கோரிக்கை விடுத்தது. ஆனால், அதைப் புறக்கணித்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, தமது குத்துவிளக்கு சின்னத்திற்கு மக்கள் மத்தியில் வரவேற்பு கிஞ்சித்தும் இருக்காது என்று கருதி, பொதுக் கட்டமைப்பின் சங்கு சின்னத்தைத் திருட நடவடிக்கை எடுத்துவிட்டது.

அதாவது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் குத்துவிளக்கு சின்னத்திற்குப் பதிலாக சங்குச் சின்னத்தை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றது. தேர்தல் அறிவிக்கப்பட்டுஒருவாரத்திற்குள்சின்னத்தை மாற்றவிடுக்கப்படும்கோரிக்கைகளைதேர்தல் ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளும் என்பதால் தமது சின்னத்தை மாற்றும்படி ஜனநாயகக் கூட்டணி தேர்தல் ஆணைக்குழுவிற்கு ஏற்கனவே கடிதம் எழுதிவிட்டது. ஆணைக்குழுவிற்கு நேரடியான எதிர்ப்புக்கள் பதிவு செய்யப்படவில்லை என்றால் சங்குச் சின்னத்தை ஜனநாயகக் கூ-ட்டணியே சுருட்டிக்கொண்டு சென்றுவிடும்.

இந்த நிலையில் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு என்ற அமைப்பு தானும் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடப்போவதாக நேற்று அறிவித்தது. தமிழ் மக்கள் பொதுச் சபைக்குள் இருந்து, கேவலமான ஏமாற்று அரசியலை முன்னெடுக்கும் தமிழ் அரசியல் கட்சிகளுடன் சேர்ந்துதேர்தலைஎதிர்கொள்ளக்கூடாதுஎன்று கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்த தரப்பினரும் தமிழ்த் தேசியத்தின் மீது உண்மையான அக்கறை கொண்ட தரப்பினரும் இணைந்து இந்த ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பை உருவாக்கியுள்ளனர்.

தமிழ்த் தேசியக் பொதுக்கட்டமைப்பின் அரைப் பாதியான தமிழ் மக்கள் பொதுச் சபையினதும் அதற்கு முன்னோடியான தமிழ் மக்கள் பேரவையினதும் கருத்தாணைகளை தமிழ்த் தேசிய அரசியல் சித்தாந்தமாக ஏற்று, கட்சி அரசியலைத் தாண்டிய தமிழ்த் தேசிய அரசியலே முக்கியம் என்ற அடிப்படையில் செயற்படப்போவதாக இந்த ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு அறிவித்துள்ளது.

இப்போது சொல்லுங்கள் வாசகர்களே, தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு என்று சொப்பன சுந்தரியின் காரை யார் வைத்திருக்கிறார்கள்? சொப்பன சுந்தரியை யார் வைத்திருக்கிறார்கள்?

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## 13ஜ அமுல்படுத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திசாநாயக்க தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் தெளிவானதொரு நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. ஜே.வி.பி. தொடர்ச்சியாக இந்த விடயத்தில் வெளிப்படையான நிலைப்பாடுகளை வெளிப்படுத்துவதில்லை. நிலையான கொள்கையொன்று அவர்களுக்கு இல்லாததே அதற்குக் காரணம். ஆகவே இந்தியா தொடர்ச்சியாக தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் தலையீடு செய்வதோடு அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

பதிலளித்த, உயர்ஆணையர்சந்தோஷ்ஜா, அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தினை நாம் அமுலாக்குமாறு புதிய ஆளும் தரப்பிடமும் நாம் நிச்சயமாக கோருவோம் என்று தெரிவித்தார். ஆனால் 13ஆவது திருத்தச்சட்டம் சம்பந்தமாக தமிழ்க் கட்சிகளின் தலைவர்களான நீங்கள் மாறுபட்ட நிலைப்பாடுகளைக்கொண்டிருக்கின்றீர்களே? என்றும் அவர் பதில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன், இந்தியா தொடர்ச்சியாக இலங்கை அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கும் அதேநேரம், முதலீடுகள், நன்கொடைகள், கல்வி, சுகாதாரம் உட்கட்டமைப்பு ஆகியவற்றுக்கான பங்களிப்புக்களை அயல் நாட்டுக்கு முதலிடம் என்ற கொள்கையின் அடிப்படையில் முன்னெடுக்கும் என்றும் கூறியுள்ளார்.

இந்தியா இலங்கைக்கு மிக அருகில் உள்ள நாடு என்ற வகையில் எந்த ஆட்சியாளர்களுடனும்இணைந்துசெயற்படும் நோக்கத்தினையே கொண்டிருப்பதோடு பிராந்திய கூட்டாண்மையில் அதீதமான கரிசனைகளைக் கொண்டுள்ளது என்றும் கூறியுள்ளார்.

ஜே.வி.பி ஆரம்பத்திலிருந்தே மார்க்சிய சிந்தனையுடைய கட்சியாகும். ஆகவே, அவர்கள் எப்போதுமே சீன சார்ப்பு நிலையில்தான் செயற்பட்டுள்ளார்கள். தற்போதும் அந்த நிலைமையில் இருந்து முழுமையாக விடுபட்டுள்ளார்கள் என்று கூறமுடியாது என்று தமிழ்த் தலைமைகள் கூறியதோடு, அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் எவ்வாறு இந்த விடயத்தினை அணுகப்போகின்றன என்பது ஆளும்தரப்பின் எதிர்காலச் செயற்பாடுளிலேயே தங்கியுள்ளது என்றும் கூறியுள்ளனர்.

இந்தியா - இலங்கை இடையிலான தரைவழிப்பாதை அமைப்பு, பலாலி விமான நிலைய வரிவாக்கம் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாகவும் தமிழ்த் தலைவர்கள் கேள்வி எழும்பியுள்ளனர். அதற்கு தரைவழிப்பாதை உடனடியாகச் சாத்தியப்படாது என்று கூறிய உயர்ஆணையர்விமானநிலையவிரிவாக்கம் மற்றும் கப்பல்சேவை என்பன தொடர்ச்சியாக முன்னேற்றமடையும் என்று கூறியுள்ளார்.

## நாடாளுமன்றத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் தேசியப் பொதுக்கட்டமைப்புடன் இணைந்து 2024 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு தீர்மானத்திருந்தோம். எனினும் அவர்கள் பொதுத்தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்று அறிவித்துள்ளார்கள். அதன் பின்னர் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் சங்குச் சின்னத்தில் இணைந்து பயணிப்பது குறித்துக் கலந்துரையாடினோம்.

பொதுக்கட்டமைப்பின் அறிவிப்பின்படி, சங்குச்சின்னத்தினைப்பயன்படுத்தவேண்டாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே நாம் தனித்து எமது கட்சியின் சின்னமான மான் சின்னத்தில் பொதுத் தேர்தலை முகங்கொடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம் என்றார்.

## காலி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகத்திற்கு வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி செயலகத்திற்குரிய வழக்கமான ஊழியர்களுக்கு இந்த வாகனங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. முன்னாள் ஜனாதிபதியினால் அரசமைப்பின் 41(1)ஆவது சரத்தின் கீழ் நியமிக்கப்பட்ட அவரது தனிப்பட்ட ஊழியர்களுக்கே அவை வழங்கப்பட்டிருந்தன.

ஜனாதிபதி செயலகத்தில் அதிக வாகனங்களை நிறுத்துவதற்கு இடமில்லாத காரணத்தினால் மாத்திரமே இந்த வாகனங்கள் ஜனாதிபதி செயலகத்திற்கு வெளியில் நிறுத்தப்பட்டுள்ளன, இவற்றை இவ்வாறு காட்சிப்படுத்துவது நோக்கம் அல்ல.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அண்மையில் வழங்கிய பணிப்புரையின் பிரகாரம், இந்த வாகனங்களை அவசர சேவைகளுக்காகவிரைவில்வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வெளிப்படைத்தன்மை மற்றும் துல்லியத்தை பாதுகாக்கும் வகையில், இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட வாகனங்களின் முழுமையானபட்டியலும்வெளியிடப்பட்டுள்ளது - என்றுள்ளது.

## தேசியப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி வலியுறுத்தியுள்ளது.

ஜனநாயகபோராளிகள்கட்சியின் செயலாளர் க. துளசி வெளியிட்டுள்ள அறிக்கையி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழர் தரப்பு தம்மை ஒரு தேசியமாக திரட்டி தமிழினத்தின் இனப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணப்படவேண்டும்என்பதனைவலியுறுத்தி ஒரு வேட்பாளரை நிறுத்தியிருந்தது. தமிழ் மக்களும் தமது வாக்குகளை அந்த வேட்பாளருக்கு கணிசமான அளவில் வழங்கியிருந்தனர்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளர் என்கிற கருத்துருவாக்கத்திற்குத் தமிழ் பொதுச்சபையினரும் தமிழ் தேசிய அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து தமிழ் பொதுக் கட்டமைப்பாகக் காத்திரமாகச் செயலாற்றி இருந்தனர். அதிலும் குறிப்பாக வடக்குகிழக்கின் சிவில் பொதுச் சபையினர் ஆற்றிய பணிகள் இனத்தின் இன்றைய காலத்தேவையாகும்.

தமிழ் தேசிய கட்சிகளை ஒன்றிணைக்கின்றபோதும் தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் தேர்வின்போதும் தேர்தல் காலப் பரப்புரைகளின்போதும் அவர்கள் ஆற்றிய பணிகள் மகத்தானவை. எமது தமிழ் வேட்பாளர் அரியநேந்திரன் காலத்தின் தேவை உணர்ந்து எவ்வித எதிர்பார்ப்புமின்றி தமிழினத்தின் எதிர்காலம் கருதி செயலாற்றினார் என்பதை தமிழினவரலாறு குறித்துவைத்துக்கொள்ளும்.

வருகின்ற நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் தமிழ்பொதுக்கட்டமைப்பாகப்போட்டியிடுகின்ற நாம் பெற்றுக்கொள்ளும் முதலாவது தேசியப் பட்டியல் உறுப்புரிமையினை அரியநேந்திரனுக்கு வழங்குவதே அரசியல் அறமாகும் என்பதனை நாங்கள் வலியுறுத்துகின்றோம் என்றுள்ளது.

# முப்படை மற்றும் பொலிஸை சேர்ந்த 750 பேருக்கு குற்றங்களில் தொடர்பு

## பதில் பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

முப்படை மற்றும் பொலிஸாரை விட்டு வெளியேறிய சுமார் 750 பேர் குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றனர் என்று தகவல்வெளியாகியுள்ளதாக பதில்பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

சில காலங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் மூலம் இந்தத் தகவல் தெரிய வந்துள்ளது. இதில் இராணுவத்தை விட்டு வெளியேறியவர்களே அதிகமாக உள்ளனர்.

யுக்திய நடவடிக்கையில், சிரேஷ்ட அதிகாரிகளும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். யுக்திய நடவடிக்கையை நடைமுறைப்படுத்துவதில் உள்ள குறைபாடுகளையும் அவதானித்தோம்.

அவைகள் நிவர்த்தி செய்யப்பட்டு இந்த நடவடிக்கைகள் எதிர்காலத்தில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும். சட்ட அமுலாக்கம், போதைப்பொருள் சோதனைகள் மற்றும் குற்றவாளிகளைக் கைது செய்தல் ஆகியவை பொலிஸ் நிலையங்களால் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன. மற்றைய கடமைகளில்பணியாற்றியஅதிகாரிகளும்இந்த நோக்கத்துக்காக பணிக்கமர்த்தப்படுவார்கள். எதிர்காலத்தில் இந்த நடவடிக்கைகளை அதிக திறனுடன் அவர்கள் மேற்கொள்வார்கள்.

பொலிஸ் அதிகாரிகள் பற்றாக்குறை உள்ளது. இதனாலேயே தற்போது, வேறு பணிகளில் ஈடுபட்டிருந்தவர்கள் திரும்ப அழைக்கப்பட்டுள்ளனர் என்றார்.

# எம்.பிக்களின் துப்பாக்கிகளை உடன் ஒப்படைக்கப் பணிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு துப்பாக்கிகளை உடனடியாக பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்படுள்ளது. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுவிட்ட நிலையில ;அதன் முன்னாள் உறுப்பினர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சேவைகள் பிரிவினால் இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கடிதங்கள் உரியவர்களுக்கு உடனடியாக அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என நாடாளுமன்ற சேவைகள் பிரிவின் பேச்சாளர் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு விட்டதால் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வந்த அனைத்து வசதிகளும் நிறுத்தப்படும். இதன்படி, முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர்களின்கொடுப்பனவு, பணிக்குழாமினருக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள், எரிபொருள் வசதிகள் மற்றும் முத்திரை கட்டணம் என்பன நிறுத்தப்பட்டுள்ளன. ஆனால், மாதிவெல நாடாளுமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில்வழங்கப்பட்டிருந்தகுடியிருப்புகளை மட்டும் தேர்தல் நடைபெறும் நாள் வரை பயன்படுத்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

பொதுத்தேர்தலில்மீண்டும்தேர்ந்தெடுக்கப்படாத அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் தேர்தல் முடிந்த மறுநாள் மீண்டும் தங்கள்குடியிருப்புகளைஒப்படைக்கவேண்டும் என்று பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# தபால் மூல வாக்கு விண்ணப்பங்கள் தயார் நிலையில்

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான தபால் மூலவாக்களிப்புவிண்ணப்பங்களைஅச்சிடும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதாக அரச அச்சகம் தெரிவித்துள்ளது.

10 இலட்சம் விண்ணப்பங்கள் அச்சிடப்பட்டுள்ளதாக அரச அச்சகர் கங்கா கல்பனி லியனகே தெரிவித்துள்ளார்.

அதற்கமைய தபால் மூல விண்ணப்பங்களின் ஒருபகுதி தேர்தல் ஆணைக்குழுவிடம்கையளிக்கப்பட்டுள்ளன.

இதனிடையே, 2024 பொதுத் தேர்தலில் தபால் மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை இன்று ஆரம்பமாகவுள்ளது.

## பங்காளிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களும் தங்கள் முடிவுகளை துரிதமாக தெரியப்படுத்துவதனால் வெகு விரைவில் எமது வேட்பாளர் நியமனக் குழு கூடி தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர்களைத் தீர்மானிப்போம்.

எதிர்வரும் தேர்தலில் இளைஞர்கள், பெண்கள், ஆற்றல் உள்ளவர்களுக்கு வாய்ப்பு வழங்கவேண்டும் என்பதுடன் ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்து மீண்டும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டுதோல்விஉற்றவர்களுக்குவாய்ப்பு வழங்குவதில்லை என்ற தீர்மானத்தையும் மேற்கொண்டுள்ளோம் என்றார்.

## ஜனநாயகக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்தின்போது தமிழர்களின் சின்னமாக அறிவிக்கப்பட்டு அடையாளப்படுத்தப்பட்ட சங்குச் சின்னத்திலே போட்டியிடுவதென

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# 13 ஆயிரத்து 309 பரீட்சார்த்திகள் ஒன்பது 'ஏ' சித்தி : முதல் 10 நிலைகளில் மாணவிகளே முன்னிலை

## பரீட்சைகள் திணைக்களம் அறிவிப்பு

13,309 பரீட்சார்த்திகள் ஒன்பது பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர். 2.12 சதவீதமானோர் ஒன்பது பாடங்களிலும்சித்திகளைபெறவில்லை. முதல்10 நிலை பெறுபேற்றில் மாணவிகள் முன்னிலையில் உள்ளனர். ஒக்டோபர் 1 முதல் 14 வரை மீள் திருத்தங்களுக்கு விண்ணப்பிக்க முடியும்எனபரீட்சைகள்ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

பரீட்சை திணைக்களத்தில் ஞாயிற்றுக்கிழமைநடைபெற்றஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

2023ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர சாதாரன தரப் பரீட்சை 2024.05.06ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை 3527 பரீட்சை மத்திய நிலையங்களில்நடைபெற்றது. பரீட்சை பெறுபேறுகளை சனி நள்ளிரவு வெளியிட்டோம்.

4 லட்சத்து 52 ஆயிரத்து 979 பேர் பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்த நிலையில், 415,454 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குதோற்றியிருந்தார்கள். முதல் தடவையாக பரீட்சைக்கு தோற்றிய 322,537 பரீட்சார்த்திகளில் 244,228 பரீட்சார்த்திகள் உயர்தர கல்விக்கு தகுதிப் பெற்றுள்ளனர்.

உயர்தர கல்விக்கான சுற்றறிக்கைக்கு அமைய மொத்த பரீட்சார்த்திகளில் உயர்தர கல்வியை தொடர்வதற்கான அடிப்படை தகைமையை 75.72 சதவீதமானோர் பெற்றுள்ளனர். கடந்த ஆண்டைகாட்டிலும்இம்முறைமுன்னேற்றகரமான தன்மை காணப்படுகிறது. 2021ஆம் ஆண்டு உயர்தரத்துக்கான அடிப்படை தகைமையை பெற்றுள்ளவர்களின் வீதம் 74.52 ஆகவும், 2022ஆம் ஆண்டு 74.38 ஆகவும் காணப்பட்டது.

முதற் தடவையாக பரீட்சைக்கு தோற்றிய பரீட்சார்த்திகளில் 13,309 பேர் ஒன்பது பாடங்களிலும் ஏ சித்திகளை பெற்றுள்ளனர்.

2.12 சதவீதமான பரீட்சார்த்திகள் 9 பாடங்களிலும் சித்திபெறவில்லை. ஆகவே 2022ஆம் ஆண்டை காட்டிலும் 2023ஆம் ஆண்டு பெறுபேறுகளின் வீதம் உயர்வடைந்துள்ளது.

### மாகாண மட்டத்திலான முன்னேற்றம்

உயர்தரத்துக்கு தகுதி பெற்றுள்ள 75.72 சதவீதத்தை காட்டிலும் உயர்வான பெறுபேற்றினை 4 மாகாணங்கள் பெற்றுக்கொண்டுள்ளன. தென் மாகாணம் 78.21 சதவீதத்தை பெற்றுக்கொண்டு முன்னிலையில் உள்ளது. கிழக்கு மாகாணம் 77.36 சதவீதத்தையும், மேல் மாகாணம் 77.11 சதவீதத்தையும், சப்ரகமுவ மாகாணம் 76.54 சதவீதத்தையும் பெற்றுக்கொண்டுள்ளன.

### மாவட்ட மட்டத்திலான முன்னேற்றம்

75.72 சதவீத பெறுபேற்றை காட்டிலும் உயரளவிளவான பெறுபேற்றை 11 மாவட்டங்கள் பெற்றுக்கொண்டுள்ளன. இதற்கமைய அம்பாறை மாவட்டம் 81.13 சதவீதத்தையும், மாத்தறை மாவட்டம் 80.57 சதவீதத்தையும், கொழும்பு மாவட்டம் 79.68 சதவீதத்தையும், மட்டக்களப்பு மாவட்டம் 78.86 சதவீதத்தையும், அம்பாந்தோட்டை மாவட்டம் 77.92 சதவீதத்தையும், கண்டி மாவட்டம் 76.91 சதவீதத்தையும், கேகாலை மாவட்டம் 76.87 சதவீதத்தையும், காலி மாவட்டம் 76.54 சதவீத்தையும், இரத்தினபுரி மாவட்டம் 76.24 சதவீதத்தையும், மன்னார் மாவட்டம் 76.24 சதவீத்தையும், கம்பஹா மாவட்டம் 75.81 சதவீதத்தையும் பெற்றுக்கொண்டுள்ளன.

### முதல் 10 நிலைகள்

ஒன்பது பாடங்களில் 6 கட்டாய பாடங்களில் பெற்றுக்கொண்ட புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு முதல் 10 நிலைகள் தீர்மானிக்கப்படும். இதற்கமைய இம்முறை முதல் நிலை ஒன்றும், 2 ஆம் நிலைகள் இரண்டும், 4ஆம் நிலைகள் மூன்றும், 7ஆம் நிலைகள் நான்கும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கமைய காலி சங்கமித்தை மகளிர் கல்லூரி மாணவியான ஹிருணி மல்ஷா குமாதுங்க முதல் நிலையை பெற்றுக்கொண்டுள்ளார். கொழும்பு மியுசியஸ் வித்தியாலத்தின் மாணவி மெத்சலா, குருநாகல் மலியதேவி மகளிர் வித்தியாலய மாணவி விமங்ஸா ஜயநதி ரத்னவீர முறையே இரண்டாம் நிலைகளை பெற்றுக்கொண்டுள்ளனர்.

நான்காம் நிலையை கொழும்பு விசாகா பாடசாலை மாணவி செஸ்யானி ஜயவர்தன, நுகேகொட அனுலாதேவி வித்தியாலய மாணவி சமோதி பெரேரா, காலி சங்கமித்தை மகளிர் கல்லூரி மாணவி நதுனி பமுதிதா ஆகியோர் பெற்றுக்கொண்டுள்ளனர்.

ஏழாம் நிலையை நுகேகொட அனுலாதேவி பாடசாலை மாணவி நிமநதி வனசரா அதிகாரி, கம்பஹா ரத்னதேவி மகளிர் கல்லூரி மாணவி தக்சரா காவிந்தி, பாணந்துறை ஸ்ரீ சுமங்கல மகளிர் கல்லூரி மாணவி தனஞ்சனா விக்கிரமகே ஆகியோர் பெற்றுக்கொண்டுள்ளனர்.

அதேபோல் 7ஆம் நிலையை மாத்தறை ராஹுல வித்தியாலயத்தின் மாணவன் சஷிரான் சமரவிக்கிரம பெற்றுக்கொண்டுள்ளார். முதல் 10 நிலைகளில் 9 நிலைகளை மாணவிகள் பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### வினாத்தாள் மீள்திருத்த விண்ணப்பம்

பரீட்சார்த்திகள் ஒக்ரோபர் 1ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை நிகழ்நிலை முறைமை ஊடாக மீள் திருத்தத்துக்கு விண்ணப்பிக்க முடியும்.(05)

# தமிழ் அரசுக் கட்சியின் ஒற்றுமைக்கான அழைப்பை தமிழ் தேசிய இளைஞர் பேரவை பரிசீலிக்கின்றதாம்



இலங்கைத் தமிழரசு கட்சியின் ஒற்றுமைக்கான அழைப்பை தமிழ்த் தேசிய இளைஞர் பேரவை பரிசீலனை செய்வதாக தமிழ்த் தேசிய இளைஞர் பேரவையின் பொதுச்செயலாளர் ச.கீதன் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பில் மேலும் தெரிவிக்கையில் -

2024 ஆம் ஆண்டுக்கான பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் புதிய ஜனாதிபதி தெரிவாகியதன் பிற்பாடு புதிய அரசியல் கலாசாரத்திற்குள் தென்னிலங்கை செல்வதை காணக்கூடியதாக இருக்கிறது.

இந்நிலையில் தமிழர்கள் அதற்கு ஏற்ற வகையில் அதற்கு ஈடு கொடுக்கக்கூடிய வகையில் தமது அரசியல் தந்திரோபாயங்கள் மூலமாக தமிழர்களின் நீண்டகால அபிலாசைகளை நிறைவு செய்து கொள்ளக்கூடிய வழிமுறைகளை ஒற்றுமையுடன் கையாள வேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதை தமிழ்த் தேசிய இளைஞர் பேரவை உணர்ந்து கொள்கிறது.

இவ்வாறான நிலையில் தமிழர்கள் ஒரே அணியில் சாத்தியமான வழிமுறைகளுக்கூடாக நகர வேண்டிய தேவை உள்ள அதே நிலையில் மாறிவரும் சூழலுக்கு ஏற்ற வகையில் இளைஞர்களின் வகிபாகத்தை அரசியலில் உறுதிப்படுத்தி தொடர்ந்து வரும் ஜனநாயக வெளிகளை கையாள்வதற்கு இளைஞர்களை பலப்படுத்த வேண்டிய தேவையையும் தமிழ்த் தேசிய இளைஞர் பேரவை நன்கு உணர்ந்து இருக்கிறது.

இந்த முக்கியமான காலப்பகுதியில் இலங்கைத் தமிழரசு கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் வெள்வேறு காரணங்களுக்காக பிரிந்து சென்றிருக்க கூடிய அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைக்கும் வகையில் ஒற்றுமைக்கான அழைப்பை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு அறிவித்திருப்பதை நாம் வரவேற்கிறோம்.

அந்த வகையில் ஆளுமையுள்ள, ஊழலுக்கு எதிரான தமிழ்த் தேசிய சிந்தனையுடன்இளைஞர்களுக்கானசரியான வகிபாகங்களை வழங்கி புதிய அரசியல் வியூகங்களை வகுத்து செயற்பட தமிழரசு கட்சி தயாராக இருக்குமாக இருந்தால் அதன் ஒற்றுமைக்கான அழைப்பை தமிழ்த் தேசிய இளைஞர் பேரவை சாதகமாக பரிசீலிக்க தயாராகவுள்ளதாக தெரிவித்துள்ளார்.(05)

# உடுவில் மகளிர் கல்லூரியில் சாதாரணதர சிறப்பு பெறுபேறு

நடந்து முடிந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் உடுவில் மகளிர் கல்லூரியில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்கள் விவரம்:

கோ. தரன்ஜா, எஸ்.அகநிலா, எஸ்.டிறோசினி, ஜஸ்மிகா, என்.செனூரி, எம்.தருணி ஆகிய மாணவர்கள் 8 ஏ பெறுபேறுகளையும், ஹ.அபிஷா, எஸ். கிருத்திகா, எஸ்.விஜயந்தி, த.அனிஷ்டியா, கு.மந்தாஜினி ஆகிய 5 மாணவிகள் 8ஏபி பெறுபேறுகளையும், ஜி.கனிஷா, சி.தாட்சாஜினி ஆகிய 2 மாணவர்கள் 8ஏசி பெறுபேறுகளையும் றூ.அபிநயா, த.திசானு, எஸ்.மக்சிமா, கே.பிறின்ஸிகா, ஏ.துளஸிகா, சூ.அத்மிகா ஆகிய மாணவிகள் 7ஏ2பி பெறுபேறுகளையும் பெற்றுள்ளனர். மற்றும் 31 மாணவிகள் 5ஏ இற்கு மேற்பட்ட பெறுபேறுகள் பெற்று சாதனை படைத்துள்ளார்கள்.

200 ஆவது ஆண்டில் காலடி எடுத்துவைக்கும் நிவையில் ஆசியாவின் முதல் பெணகள் பாடசாலையாகத் திகழும் உடுவில் மகளிர் கல்லூரி, இவ்வாறான பெறுபேற்றைப் பெற்றமை ஒருவரலாற்றுசாதனையாகும்எனபாடசாலை சமூகத்தித்தினினர் தெரிவித்தனர். (05)

## நுவரெலிய மாநகர சபை

# முன்னாள் முதல்வர் வீட்டில் திருட்டு

நுவரெலியா கஜபாபுர பகுதியில் அமைந்துள்ள நுவரெலியா முன்னாள் மாநகர சபை முதல்வரின் வீட்டினுள் புகுந்த திருடர்கள் வீட்டில் இருந்த நகைகள் உட்பட பெறுமதியான பொருள்களை திருடிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சனிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் வீட்டில் இருந்தவர்கள் உறங்கிக்கொண்டிருந்தபோது வீட்டினுள் இனந்தெரியாதோர் புகுந்துள்ளனர்.

பொலிஸார் நடத்திய முதற்கட்ட விசாரணையின்போது வீட்டின் மேல் மாடியில் உள்ள ஜன்னலை உடைத்து உள்நுழைந்த மர்ம நபர்கள் தனி அறையொன்றில் உள்ள அலுமாரியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த சிறிய பெட்டகத்திலிருந்து தங்க நகைகள் மற்றும் சில பெறுமதியான பொருள்களைத்திருடிச்சென்றுள்ளமை தெரியவந்தது.

எனினும், அலுமாரிகள் உடைக்கும் சத்தம்கேட்டுவீட்டின்உரிமையாளர்கள் மேல்மாடிக்கு சென்று பார்த்தபோது ஜன்னல் திறக்கப்பட்டிருந்ததுடன், அங்கிருந்து திருடர்கள் இருவர் தப்பி ஓடுவதையும் அவதானித்துள்ளனர். அவ்வேளை அயலவர்களின் உதவியை நாடியுள்ளனர். இருந்தும் திருடர்கள் ஓட்டோ மூலம் தப்பிச் செல்லும் காட்சிகள் வீட்டுக்கு அருகில் வீதியோரமாக பொருத்தப்பட்டிருந்த சிசிடிவிகாணொளியில்பதிவாகியுள்ளது.

இதனை அடிப்படையாக கொண்டு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தத்திருட்டுச்சம்பவம்தொடர்பில் நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் வீட்டார் முறைப்பாடு செய்துள்ள நிலையில், தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் கைரேகை நிபுணர்கள், மோப்ப நாயுடன் நுவரெலியா பொலிஸார்மேலதிகவிசாரணைகளை மேற்ண்டு வருகின்றனர்.

(05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## தமிழ் தேசியம்

**தமிழ் தேசிய அரசியல் பரப்பில் அதனை முன்வைத்து அரசியல் செய்யும் தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமைக் கோசம் மிகவும் பலவீனமானது என்பதே எப்போதும் எமது நிலைப்பாடு. கொள்கைப் பற்றுறுதி இல்லாத முன்னாள் ஆயுதக் குழுக்களும் உள்வாங்கப்படும் நிலையில், சந்தர்ப்பவாத அரசியலைத் தவிர்த்து ஒரு முழுமையான தேசிய அரசியலை முன்னெடுப்பது இந்தத் தரப்புக்களுக்குச் சிரமம். ஆயுதக் குழுக்களைப் பொறுத்தவரையில் தமது இருப்புக்கு சந்தர்ப்பவாத அரசியல் ஒன்றே வழி. அதன் பாதிப்பினாலோ என்னவோ பாரம்பரியக் கட்சிகளில் உள்ளவர்களும்கூட சந்தர்ப்பவாத அரசியலின் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளமை வரலாறு. இத்தகையவர்களின் கூட்டு ஒருபோதும் தமிழ்த் தேசியப் பற்றுறுதிகொண்டதாக அமைய முடியாததன் காரணமாகவே அது மிகப் பலவீனமானதாக இருக்கின்றது.**

**தமிழ் கட்சிகள் அல்லது தமிழ் அரசியல் தரப்புக்களின் ஒற்றுமையைத் தமிழ் மக்கள் எப்போதும் வரவேற்றே வந்திருக்கிறார்கள். தேர்தல்களின்போது தமது விருப்பத்தை அவர்கள் நெடுங்காலமாகத் தமது வாக்குகளின் மூலம் வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள். அதனாலேயே தமிழ்க் கட்சிகளும் 'ஒற்றுமை' மாயைக் காட்டி அவர்களை ஏமாற்றி வந்திருக்கின்றன. தேர்தலில் இலகுவான வெற்றிக்கு இந்த தமிழ் தேசியம் மற்றும் ஒற்றுமை முழக்கங்கள் நன்கு உதவும் என்பது அவற்றுக்குத் தெரியும். அதைத் தவிர்த்து கொள்கை ரீதியான கருத்தொற்றுமை இந்த அரசியல் தரப்புக்களுக்குள் இருந்ததில்லை. அதுவே நாம் தொடர்ந்தும் கட்சிகளின் ஒற்றுமை என்கிற ஏமாற்று நாடகத்தை எதிர்ப்பதற்கான காரணம்.**

**தமிழ்த் தேசியத்தின் பால் உண்மையான பற்றுறுதியும் அர்ப்பணிப்பும் கொண்டிருந்தால் தமிழர்கள் மத்தியில் இத்தனை கட்சிகள் தோன்றியிருக்காது. பிளவுகள் ஏற்பட்டிருக்காது. ஒவ்வொருவரும் மக்களைக் கவர்வதற்கான இலகுவழிஎன்றுகருதுவதன்காரணமாகவேமீண்டும்மீண்டும் ஒருவரைவிட ஒருவர் தீவிர தமிழ்த் தேசியம் பேசுவதாகக் காட்டிக்கொள்கிறார்கள். அதற்கு மேல் அவர்கள் தமிழ்த் தேசியத்திற்கு உண்மையாக இருப்பதில்லை. இருந்ததும் இல்லை. தமது சொந்த அரசியல் நலன்களில் மட்டுமே அக்கறை கொண்டிருக்கின்றார்கள். தமிழ்த் தேசியத்தை அவர்கள் உண்மையில் நேசித்திருந்தால் இத்தனை கட்சிகளின் உருவாக்கமும் தேர்தல் காலங்களில் அவற்றின் ஒருங்கிணைவும் தேவைப்பட்டிருக்காது.**

**கட்சிகள் இடையிலான பிளவுகளும் புதிய கட்சிகளின் உருவாக்கங்களும் தேர்தல் காலங்களில் தமக்கு ஆசன ஒதுக்கீடுகளைப் பெறுவதற்கான உத்தியாகவே அரசியலாளர்கள் பார்க்கப்படுகின்றது. ஒரே கட்சிக்குள் இருந்து தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பைப் பெறுவதிலும் பார்க்க தனிக் கட்சியாகப் பிரிந்து பின்னர் தேர்தல் காலத்தில் ஒருங்கிணைவதன் மூலம் இலகுவாக அந்த வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடிகிறது. இதற்காகவே தீவிர தமிழ்த் தேசியவாதம் பேசிக்கொண்டு வெளியேறிச் செல்வோர் தேர்தல் வந்ததும் முன்னைய கட்சிகளுடன் 'ஒற்றுமை' முழக்கமிட்டுக்கொண்டு சேர்க்கிறார்கள். இது முழுச் சுயநலமன்றி வேறென்ன. இதன் காரணமாகவே இந்தப் போலி ஒற்றுமையையும் போலித் தமிழ்த் தேசியத்தையும் எதிர்க்கவேண்டியுள்ளது. அம்பலப்படுத்தவேண்டியுள்ளது.**

**இந்தத் தேர்தலிலும் மீண்டும் இதே தமிழ்த் தேசியம், ஒற்றுமை என்பவற்றைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு மக்களின் வாக்குகளைச் சூறையாடுவதற்குப் பல அரசியல் தரப்புக்களும் முன்வரும் போலிகளையும் ஏமாற்றுப் பேர்வழிகளையும் சரியாக இனங்கண்டு புறக்கணிப்பதன் மூலமே உண்மையான தமிழ்த் தேசியத்தை மக்களால் காப்பாற்றவும் பேணவும் தகவமைக்கவும் முடியும்.**

# புலம்பெயர் தமிழர்களுக்கு ஒரு வேண்டுகோள்: அன்புள்ள புலம்பெயர்ந்த தமிழ் மக்களே!

தமிழீழக் கனவு முடிந்துவிட்டது என்ற யதார்த்தத்தை நாம் எதிர்கொள்ள வேண்டிய நேரம் இது, இந்தஎண்ணத்தில்ஒட்டிக்கொண்டிருப்பதுநமது மக்களின் முன்னேற்றத்திற்கும் நல்வாழ்விற்கும் தடையாக இருக்கும். போரின் வலி மிகுந்த இறுதி நாட்களை மீள்பார்வை செய்வது, இதில் யார் ஈடுபட்டார்கள் என்று விவாதிப்பது, மாற்று விளைவுகளைஊகிப்பதுபோன்றவைபயனளிக்காது. அவைகாயங்களைஆழப்படுத்தவும், நமதுசமூகம் மற்றும் ஒட்டுமொத்த தேசத்திற்குள் மேலும் பிளவை உருவாக்கவும் மட்டுமே உதவுகின்றன. மாறாக, குணப்படுத்துதல், ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பை ஊக்குவிக்குதலை உள்ளடக்கிய நம் எதிர்காலத்தில் கவனம் செலுத்தவேண்டும்.

இந்தநிகழ்வுகளைமீண்டும்நினைவுபடுத்துவது நமது இழப்புக்களுக்குத் தீர்வைத் தேடும் ஒரு வழியாகத் தோன்றலாம். ஆனால் உண்மையில், இது ஒரு கவனச்சிதறல். நமது தாயகத்தின் எதிர்காலம் முன்னேறுவதற்கான வழிகளைக் கண்டறிவதிலேயே தீர்வு தங்கியுள்ளது.

ஒருமுறை அல்ல, இரண்டு முறை தோல்வியை அனுபவித்த தற்போதய அரசியல் தலைமை (NPP), எப்படியோ ஒருவழியாக பெரும்பான்மையானவர்களின் நம்பிக்கையை வென்றெடுத்துள்ளதுடன் ஒத்துப்போகவும் முடிந்திருக்கிறது. கடந்த கால கசப்பிலிருந்து எழுவது சாத்தியம் என்று அவர்கள் காட்டியுள்ளனர், அதிலிருந்துநாம்படிப்பினைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

நமதுமக்களுக்காக, குறிப்பாகபாதிக்கப்படக்கூடிய சிறுபான்மையினராக இருப்பவர்களுக்காக, நாம் எவ்வாறுநடந்துகொள்கிறோம்என்பதற்குநாம்தான் பொறுப்பேற்றாக வேண்டும். எமது புலம்பெயர் சமூகம் தொலைதூரத்தில் இருந்து பயனற்ற விடயங்களுக்காக 'நெஞ்சுத் துடிக்குதே' என்று கூவிக்கொண்டிராமல், தாயகத்தில்இருப்பவர்களுக்கு நன்மை பயக்கும் ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கான வழிகளைத் தேட வேண்டும். அடைய முடியாத இலக்குகளுக்காக தொடர்ந்து போராடுவது, நாம் பாதுகாக்க விரும்பும் மக்களுக்கு மட்டுமே தீங்கை விளைவிக்கும்.

நாம் பெரும்பான்மையினருடன் இணைந்து வாழவேண்டும், ஐக்கிய இலங்கைக்குள் அமைதியான சகவாழ்வுக்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்என்பதையேஇதுகாட்டுகிறது. தற்போதைய ஆளும்தரப்பு சமத்துவத்தை மேம்படுத்துவதற்கான அதன் முயற்சிகளில் நேர்மையாக இருப்பதாகத் தெரிகிறது, மேலும் அவர்களுடன் நல்ல நம்பிக்கையுடன் ஈடுபட இந்தத் தருணத்தை நாம் பயன்படுத்தவேண்டும். இதில் புலம்பெயர் சமூகம் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது, ஆனால் நாம் யதார்த்தத்துடனும் நடைமுறையுடனும் செயல்பட்டால் மட்டுமே அது சாத்தியம். சமாதானம், சமத்துவம் மற்றும் ஒத்துழைப்பில் வேரூன்றிய தீர்வுகளுக்காக வாதிடும் அரசியல் பிரதிநிதிகளை ஆதரிப்போம், பிரிவினையில் வளர்பவர்களை நிராகரிப்போம்.

தற்போதைய தலைமையின் கீழ் நல்லிணக்கத்திற்கான அரிய வாய்ப்பு உள்ளது, அதை நாம் வீணடிக்கக்கூடாது. அமைதியை வளர்ப்பதற்கும், அதை அடைய நமக்கு உதவக்கூடியவர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கும் நமது முயற்சிகளை வழிநடத்துவோம்.

ஒற்றுமையிலும் நம்பிக்கையிலும்,

**அரியரத்தினம் கோபிகிருஷ்ணா. எம்.டி**

# ஜனாதிபதி அலுவலகத்திற்கு சொந்தமான 107 வாகனங்களை பயன்படுத்தியது யார்?

## விவரங்கள் வெளியாகின

சமீபத்தில் மீள கையளிக்கப்பட்ட ஜனாதிபதி அலுவலகத்திற்கு சொந்தமான வாகனங்களை பயன்படுத்தியவர்கள் யார் என்ற விவரங்களை ஜனாதிபதி அலுவலகம் அம்பலப்படுத்தியுள்ளது.

அறிக்கையொன்றில் இதனை தெரிவித்துள்ள ஜனாதிபதி செயலகம் மீள ஒப்படைக்கப்பட்டுள்ள வாகனங்கள் பொலிஸ் பாதுகாப்புடன் ஜனாதிபதி செயலகத்திற்கு வெளியே நிறுத்தப்பட்டுள்ளன என குறிப்பிட்டுள்ளது.

முன்னையஜனாதிபதிதனக்குவழங்கப்பட்டிருந்த அதிகாரங்களை பயன்படுத்தி தான் நியமனம் செய்த அதிகாரிகளிற்கு 107 வாகனங்களையும் வழங்கியிருந்தார் என ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

மீள கையளிக்கப்பட்ட வாகனங்களை காட்சிப்படுத்துவது தங்களின் நோக்கமல்ல எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி அலுவலகம், குறிப்பிட்ட வாகனங்களை அத்தியாவசிய சேவைகளிற்கு வழங்குவதற்கான உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளது. மேலும், வாகனங்களைபயன்படுத்தியவர்களின்பட்டியலையும் ஜனாதிபதி அலுவலகம் வெளியிட்டுள்ளது.(05)

# ஜனநாயகக் கூட்டணி இம்முறை சங்குச் சினத்திலேயே போட்டி

## ரெலோ செயலாளர் தெரிவிப்பு



எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியாக குத்துவிளக்குக்கு பதிலாக சங்கு சின்னத்தில் களமிறங்கவுள்ளதாக தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமும் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் திங்கட்கிழமை அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலளார் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் தேசியத்தின் மீது பற்றுக்கொண்ட இளைஞர்களை இணையுமாறும் அவர் அழைப்பு விடுத்தார்.

இலங்கை தமிழரசுக்கட்சியின் அழைப்பு தொடர்பில் எதிர்காலத்தில் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு தீர்மானிக்கப்படும் எனவும் கருணாகரம் தெரிவித்தார்.(05)

# முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீனின் மக்கள் சந்திப்பு



வவுனியா சூடுவெந்தபுலவில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவருமான ரிசாட் பதியுதீனின் மக்கள் சந்திப்பு ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த மக்கள் சந்திப்பானது கடந்த ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாஸவிற்கு வாக்களித்தமைக்காக மக்களிற்கு நன்றி தெரிவிக்கும் முகமாகவும், நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் நிலைப்பாட்டை மக்களுக்கு தெளிவூட்டும் முகமாகவும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.


இதன்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் தலைவருமான ரிசாத் பதியுதீன், கட்சியின் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் ஜெயதிலக்க, முன்னாள் நகர சபை உறுப்பினர்களான லரிப், பாரி மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.(05)







# சட்டவிரோதமாக இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்டவர் கைது



பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செபல்டன்வத்த பகுதியில் சட்டவிரோதமாக இரத்தினக் கல் அகழும் பணியில் ஈடுபட்ட ஒருவர் சனிக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொகவந்தலாவை பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவொன்று மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் பொகவந்தலாவ பகுதியைச் சேர்ந்த 50 வயதுடையவர் ஆவார்.

இவரிடமிருந்து இரத்தினக்கல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட கருவிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்டுள்ள வெளிநாட்டு சிகரட்டுகளுடன் ஒருவர் கைது

சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 55 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரட்டுகளுடன் பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண் ஜாஎல பிரதேசத்தை சேர்ந்த 34 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரான பெண் டுபாயிலிருந்து நேற்று அதிகாலை 12.00 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது, விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் பெண்ணின் பயணப் பொதியிலிருந்து 36,800 சிகரட்டுகள் அடங்கிய 184 சிகரட்டு காட்டுன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட பெண் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன், அவரை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 2 ஆம் திகதி நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜராகுமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(05)

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# மதுபான சாலையை உடனடியாக இடம்மாற்றக்கோரிப் போராட்டம்

## மன்னார் மக்கள் தன்னெழுச்சி



மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி,எழுத்தூர் சந்திக்கு அருகில் புதிதாக திறக்கப்பட்டுள்ள மதுபானசாலையை உடனடியாக இடம் மாற்றக் கோரி பல நூற்றுக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.



இந்த போராட்டம் திங்கட்கிழமை காலை மதுபானசாலைக்கு முன் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த மதுபானசாலை அமைந்துள்ள பகுதியில் மக்களின் குடியேற்றம், இளைஞர் பயிற்சி நிலையம், ஆடைதொழிற்சாலை, பள்ளிவாசல் ஆகியவை காணப்படுகின்ற நிலையில் மக்களின் எதிர்ப்பையும் மீறி குறித்த மது விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளதாக மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கடந்த மாதம் குறித்த பகுதியை சேர்ந்த மக்கள் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்ததோடு,குறித்த மதுபானசாலையைதிறக்கஅனுமதிக்கவேண்டாம்என கோரி மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் கை அளித்ததாகவும், தாங்கள் தொடர்ந்து பல்வேறு எதிர்ப்பை வெளிப்படுத்தி வந்த நிலையிலும் குறித்த மது விற்பனை நிலையம் கடந்த வாரம் திறக்கப்பட்டதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பிரேத பெட்டியுடன் குறித்த பகுதிக்கு வந்த நூற்றுக்கணக்கான மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், சம்பவ இடத்திற்கு வந்த மன்னார் பிரதேசச் செயலாளர் எம்.பிரதீப் மக்களுடன் கலந்துரையாடினார். எனினும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் குறித்த பகுதிக்கு வர வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர்.

மக்களின் கோரிக்கைக்கு அமைவாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் குறித்த பகுதிக்கு வருகை தந்து மக்களுடன் கலந்துரையாடினார்.

இதன் போது, மக்கள் தமது பிரச்சினைகளை அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு சென்றனர். இந்நிலையில் குறித்த மதுபானசாலையை பிரதேச செயலாளர் அல்லது அரசாங்க அதிபரின் உடனடியாக மூட முடியாது என்றும் மதுவரி திணைக்கள ஆணையாளர் நாயகம் ஊடாகவே நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

மேலும் , இவ்விடயம் குறித்து உடனடியாக மதுவரி திணைக்கள ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டு வருவதாகவும்,குறிப்பாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்து மதுபானசாலையை நிரந்தரமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும், குறிப்பாக தொடர்ச்சியாக மக்களின் எதிர்ப்பு காணப்படுகின்ற நிலையில் குறித்த மதுபானசாலை திறக்கப்பட்டுள்ள விடயத்தை உரிய தரப்பினரின் கவனத்திற்கு கொண்டு வருவதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

இந்நிலையில் மக்களின் கோரிக்கை அடங்கிய மகஜர் அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்ட நிலையில் அரச அதிபரின் வாக்குறுதிக்கு அமைய மக்கள் ஆர்ப்பாட்டத்தை கை விட்டுச் சென்றனர்.(05)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை மீளநடத்தக் கோரி ஆர்ப்பாட்டம்

## பெற்றோர்களால் முன்னெடுப்பு



2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை மீள நடத்துமாறு கோரி பெற்றோர்கள் சிலர் கல்வி அமைச்சுக்கு முன்பாக திங்கட்கிழமைகாலைஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில்பரீட்சைவினாத்தாளின் மூன்றுவினாக்கள்சமூகஊடகங்களில் கசிந்திருந்தன.

பின்னர்,பரீட்சையைமீளநடத்துவது குறித்துத் தீர்மானிப்பதற்காகக் கல்வி அமைச்சால் 7 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்த நிலையில் பரீட்சை மீள நடத்தப்படத் தேவையில்லை என்று அந்தக் குழு பரிந்துரைத்திருந்தது.

மேலும், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்குக் கசியப்பட்ட மூன்று வினாக்களுக்கான புள்ளிகள் இலவசமாக வழங்கப்படும் எனவும் அக்குழு அறிவித்திருந்தது.

இதனையடுத்து, பெற்றோர்கள் சிலர் ஒன்றிணைந்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை மீள நடத்துமாறு கோரி கல்வி அமைச்சுக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (05)

# 12 வயதுக்குட்பட்டவர்களுக்கு இன்று மிருகக்காட்சிசாலை அனுமதி இலவசம்

## சிறுவர் தினத்தை முன்னிட்டு

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு இன்று ஒக்ரோபர் 01 ஆம் திகதி 12 வயதுக்குட்பட்ட அனைத்து சிறுவர்களுக்கும் மிருகக் காட்சிசாலையைப்பார்வையிடுவதற்கு இலவசஅனுமதிவழங்கப்படவுள்ளது.

அதன்படி, தெஹிவளை மிருகக் காட்சிசாலை, பின்னவலையானைகள் சரணாலயம்மற்றும்அம்பாந்தோட்டை, ரிதிகம சபாரி பூங்கா ஆகியவற்றைப் பார்வையிடுவதற்கு 12 வயதுக்குட்பட்ட அனைத்து சிறுவர்களுக்கும் இலவச அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(05

# அம்பாறையில் ஐஸ் போதைப்பொருளுடன் கைதான சந்தேகநபர் தொடர்பில் மேலதிக விசாரணைகள்



ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக கல்முனை விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

அம்பாறைமாவட்டம்இறக்காமம்பொலிஸ்பிரிவில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இரகசிய தகவல் ஒன்றினை தொடர்ந்து வீதி ரோந்து நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப் பதிகாரிபொலிஸ்பரிசோதகர்ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்க தலைமையிலான அதிகாரிகள் சந்தேகத்திற்கிடமாக நடமாடிய சந்தேகநபர் மற்றும்சான்றுப்பொருள்களை மீட்டுஇறக்காமம்பொலிஸாரிடம்சட்டநடவடிக்கைக்காக ஒப்படைத்துள்ளனர்.

வரப்பத்தான்சேனை 02 வண்டிக்காரன் வீதி பகுதியை சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான 43 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

5 கிராம் 650 மில்லிகிராம் ஐஸ்போதைப்பொருள் சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர் போதைப்பொருள் நுகர்தல் மற்றும் விற்பனையில் பல நாள்களாக ஈடுபட்டவர் என விசாரணையில் இருந்து தெரியவந்தள்ளது.

மேலும், இந் நடவடிக்கை விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமையஅம்பாறைவலயக்கட்டளை அதிகாரி பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எஸ்.பி குணசிறியின் அறிவுறுத்தலுக்கமைய மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர்களான சம்பத் குமார அசித ரணசூரிய ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்க தலைமையிலான அதிகாரிகள் முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# பஸ் ஓடிக்கொண்டிருந்தபோது கழன்று விலகிய சக்கரங்கள்

## 20 பேரின் உயிரை காப்பாற்றிய சாரதி



பண்டாரவளை இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்று சனிக்கிழமை மாலை வெளிமடை - பொரலந்த வீதியில் பயணித்துக்கொண்டிருந்தபோது திடீரென பஸ்ஸின் பின்புற சக்கரங்கள் இரண்டு சமநேரத்தில் அகன்று விலகிச் சென்றுள்ளன.

இதனால் பஸ் பாரிய விபத்தில் சிக்கவிருந்த நிலையில், சாரதி உரிய நேரத்தில் பஸ்ஸை தரித்து நிறுத்தியதால் விபத்து தடுக்கப்பட்டுள்ளதாக பஸ்ஸில் பயணித்த பயணிகள் தெரிவித்தனர்.

பஸ்ஸில் 20 பயணிகள் வரை இருந்த நிலையில், சமயோசிதமாக செயற்பட்டு பஸ்ஸை நிறுத்தி, பயணிகளின் உயிரை காப்பாற்றிய சாரதியை பயணிகள் பாராட்டியமை குறிப்பிடத்தக்கது. (05)

# பிரைட் ரைஸ், கொத்து ரொட்டியின் விலைகள் நள்ளிரவு முதல் குறைப்பு

*பிரைட் ரைஸ் மற்றும் கொத்து ரொட்டியின் விலை ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல் 40 ரூபாவால் குறைக்கப்படும் என உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.*

*அத்தோடு, முட்டை ரொட்டி ஒன்றின் விலை 30 ரூபாவால் குறைக்கப்படும் எனவும் சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் தெரிவித்துள்ளார்.*

*ஞாயிறு இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.(05)*



# யாழில் கணவாய் பிடிக்க கடலுக்குசென்றவர் சாவு

கணவாய் பிடிப்பதற்காக கடலுக்கு அடியில் வலைகளை கட்டுவதற்காக கடலுக்குச் சென்ற கடற்தொழிலாளி உயிரிழந்த சம்பவம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் - காக்கை தீவு பகுதியை சேர்ந்த 39 வயதுடையவரே உயிரிழந்துள்ளார்.

இவர் காக்கைதீவு பகுதியில் இருந்து தனது சக தொழிலாளிகள் ஐவருடன் கணவாய் பிடிப்பதற்கான வலைகளை கடலுக்கு அடியில் கட்டுவதற்காக கடலுக்குப் படகில் சென்றுள்ளார்.

படகில் திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டு மயக்கம் அடைந்துள்ளார்.

இந்நிலையில், உடனடியாக சக தொழிலாளிகள் படகை கரைக்கு திருப்பி, வைத்தியசாலைக்கு அவரை கொண்டுசென்ற போதிலும், அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளார் என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

உடற்கூற்று பரிசோதனையின்போது அவர் மாரடைப்பால் உயிரிழந்தார் என அறிக்கையிடப்பட்டுள்ளது.(05)

# ஒருவர் கைது

கிரிந்திவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சபுகஹவத்த பகுதியில் சட்டவிரோத மதுபானம் வடிப்பதற்கு பயன்படுத்தப்படும் கோடாவுடன் சந்தேக நபர் ஒருவர் சனிக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிரிந்திவெல பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது இவர் கைதுசெய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் விஹார கும்புர, கிரிந்திவெல பிரதேசத்தை சேர்ந்த 21 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து மதுபானம் வடிப்பதற்கு பயன்படுத்தப்படும் 1080 வீற்றர் (06 பெரல்) கோடா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிரிந்திவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# நீதிக்காகவும் மக்களின் நல்வாழ்வுக்காகவும் துணிந்து குரல் கொடுத்தவர் குமார வெல்கம

**ரிஷாத் அஞ்சலி**



நீதிக்காகவும் மக்களின் நல்வாழ்வுக்காகவும் என்றும் துணிந்து குரல் கொடுத்த ஓர் அரசியல்வாதி குமார வெல்கம என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் குமார வெல்கமவின் இழப்பு தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அனுதாப அறிக்கையில் இவ்வாறு தெரிவித்த அவர் அதில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு -

இலங்கை அரசியலில் துணிந்து, கருத்துக்களால் எதனையும் எதிர்கொள்ளக்கூடிய அரசியல்வாதியான குமார வெல்கமவின் இழப்பு குறித்து எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முன்னாள் அமைச்சரும், சக நாடாளுமன்ற உறுப்பினருமான குமார வெல்கம, மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகியதுடன், அப்பிரதேசத்தில் வாழும் மூவின மக்களினாலும் விரும்பக்கூடியவராக இருந்து வந்துள்ளார்.

இதேவேளை, முஸ்லிம்கள் செறிந்துவாழும் வெலிகம பகுதி மக்களின் அதிகப்படியான வாக்குகள், கடந்த தேர்தல்களில் குமார வெல்கமவுக்கு அளிக்கப்பட்டமை, அப்பிரதேச முஸ்லிம்களுடன் அவருடைய நல்லிணக்கத்தை எடுத்துகாட்டுகின்றது.

மக்களின் நன்மைக்காக, தான் வகிக்கும் அமைச்சுப் பதவியைக் கூட விட்டுவிட்டு, சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து, துணிந்தும் அச்சமின்றியும் நாடாளுமன்றத்திற்குள்ளும் வெளியிலும் தமது ஆழமான கருத்துக்களை தெரிவித்து வந்த ஓர் அரசியல்வாதியாக, அமரர் குமார வெல்கமவை காணமுடியும்.

அவர் சுகவீனமுற்று வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், தமது 74 வயதில் மரணமாகியுள்ளார்.

அன்னாரது இழப்பினால் துயறுற்றிருக்கும் குடும்பத்தினர்கள் மற்றும் அவரின் ஆதரவாளர்களுக்கு எனது ஆழ்ந்த கவலையை தெரிவித்துக்கொள்கின்றேன்.
- என்று குறிப்பிட்டுள்ளார்.(05)



## ஜனநாயகக்....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

ஏகமனதாக தீர்மானம் எடுத்திருந்தது.

அந்த வகையில் குத்துவிளக்குச் சின்னத்துக்கு பதிலாக சங்குச் சின்னத்தினை பயன்படுத்துவதற்கான வேண்டுகோள் தேர்தல்கள்ஆணையத்திற்குஜனநாயகதமிழ்த் தேசியக் கூட்டணியால் விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் தேசியத்தின் மீது பற்றுக்கொண்ட இளைஞர்கள் இணையவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்று, அக்கூட்டமைப்பின் பெயரைப் பயன்படுத்தக்கூடாது என்று தடுத்த தமிழ் அரசுக் கட்சி எம்மை கூட்டமைப்பாக செயற்பட வாருங்கள் என்று அழைப்பது பொருத்தமானது அல்ல.

அத்துடன், கூட்டமைப்பாக செயற்படுவதாக இருந்தால் ஊடகங்கள் ஊடாக அழைப்பதும் முறையல்ல. அலுவலக ரீதியாக பொறுப்பு வாய்ந்தவர்கள் அதற்கான பேச்சை முன்னெடுப்பதற்குஅழைப்புவிடுக்கவேண்டும். அதேநேரம், எம்மைப் பொறுத்தவரையில் தமிழ் அரசுக் கட்சி வெளியேறியதன் பின்னர் நாம் ஐந்து கட்சிகள் ஒன்றாகச் செயற்பட்டு வருகின்றோம்.

கடந்த ஜனாதிபதி தேர்தலுடன் நாம் ஏழுகட்சிகள் ஒன்றிணைந்து 83 அமைப்புக்களின் கூட்டான தமிழ் மக்கள் பொதுச்சபையுடன் பொதுக்கட்டமைப்பை உருவாக்கிச் செயற்பட்டு வருகின்றோம். ஆகவே, இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அழைப்பு தொடர்பில் எதிர்காலத்தில் பேச்சு நடத்தப்படும். அதன் பின்னர் அடுத்தகட்டம் தீர்மானிக்கப்படும் - என்றார்.

## பேரவை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்பார்க்கின்றனர்.

முதிர்ந்த அரசியல்தலைவர்கள்வழிகாட்ட நிபுணத்துவமும்பல்பரிணாம ஆளுமையும் தமிழ்த்தேசிய பற்றுறுதியும்கொண்ட தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள் அணி வடக்கு, கிழக்கில் களம் காண வேண்டும் என்பது இன்று தமிழர்கள் அனைவரது வேணவாக இருக்கின்றது.

கோட்பாட்டுத் தளத்தில் தமிழ் மக்கள் பேரவை, தமிழ் மக்கள் பொதுச் சபை என்பவற்றின் கருத்தாணைகளைத் தமிழ்த் தேசிய அரசியல் சித்தாந்தமாக ஏற்றுக்கொண்டு சமகால வாழ்வியல் விடயங்களையும் உள்வாங்கிய தேர்தல் விஞ்ஞாபனத்தை இந்தத் தமிழ்ப் பொது வேட்பாளர்கள்அணியினர் கொண்டிருப்பர்.

இதற்காக வடக்கு, கிழக்கு தழுவிய தூய தமிழ்த்தேசிய முகங்களை தொகுதிவாரியாக அனைத்து சமத்துவ பிரதிபலிப்புக்களுடன் கண்டறிய உதவுமாறு அனைத்து தமிழ் மக்களுக்கும் அறைகூவல் விடுகின்றோம். அனைத்து சிவில் சமூக பிரதிநிதிகள் பல்கலைகழக சமூகம் மாதர் அமைப்புகள் தொழிற்சங்கங்கள் அரசியல் இயக்கங்கள் இதில் தங்கள் பங்களிப்பை இதயசுத்தியுடன் ஆற்ற முன்வருமாறு வேண்டுகின்றோம்.

பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் அடுத்த வாரம் எதிர்நோக்கி இருக்கின்ற இந்த தருணத்தில் வடக்கு, கிழக்கின் திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், வன்னி, அம்பாறை தேர்தல் மாவட்டங்களை சார்ந்த ஊழலற்ற மதுபோதை வணிகங்களுடனும் சமூகப் பிறழ்வு நடத்தைகளுடன் எவ்விதத்திலும் தொடர்புபடாத தமிழ்த் தேசியத்திலும் தமிழ் மக்கள் வாழ்வியல் மேம்பாட்டிலும் பற்றுதியான கறை படியாத மாற்றத்திற்கான தூய தமிழ்த் தேசிய முகங்களை பரிந்துரை செய்யுமாறு வேண்டுகின்றோம். அவர்கள் மக்கள் மன்றில் வெளிப்படுத்தப்பட்டு தமிழ் சிவில் கட்டமைப்புக்களின் ஒப்புதலுடன் பட்டியல் இறுதியாக்கப்படும். அவர்கள் தமிழ்த் தேசிய நலனை முன்னிறுத்தும் பொதுவேட்பாளர்களாக நாடாளுமன்ற தமிழ் மக்கள் பிரதிநிதித் துவத்திற்கான தேர்தலை எதிர்கொள்வர்.

கட்சி அரசியலைக் கடந்த இந்த திட்ட முன்மொழிவுக்கு அனைத்து தமிழர்களது ஆதரவையும் பங்குபற்றுதலையும் வேண்டி நிற்கின்றோம் - - என்றுள்ளது.

## எரிபொருள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 311 ரூபாவாகும்.

95 ஒக்டேன் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலையில் எவ்வித மாற்றமும் இல்லை என பெற்றோலிய சட்டக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

லங்கா ஒயிட் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 24 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 283 ரூபாவாகும்.

லங்கா சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 33 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 319 ரூபாவாகும்.

இலங்கை மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 19 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 183 ரூபாவாகும்.

## வாக்காளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழுவினால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் குறிப்பிடப்படுவதாவது,

நாடாளுமன்ற தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்கவுள்ள வாக்காளர்களின் வாக்காளர் இடாப்புகள் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியிலிருந்து காட்சிப்படுத்தப்படவுள்ளன.

காட்சிப்படுத்தப்படும் இடங்கள் பின்வருமாறு,

1. அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு , சுதந்திர சதுக்கம் கொழும்பு 07
2. தொழில் திணைக்களம், தொழில் செயலகம், நாராஹென்பிட்டி கொழும்பு 05
3. கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல
4. பதிவாளர் நாயகம் திணைக்களம், இல . 243/3யு , டென்சில் கொப்பேகடுவ மாவத்தை , பத்தரமுல்ல
5. அஞ்சல் தலைமையகம், டீ.ஆர்.விஜேவர்த்தன மாவத்தை, கொழும்பு 10
6. கடற்றொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சு , மாளிகாவத்தை
7. நகர அபிவிருத்தி அதிகார சபை

தேர்தல் ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள www.elections.gov.lk என்ற இணையத்தளத்தின் மூலம் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்.

தபால் மூலம் வாக்களிக்க விரும்புவோர் வாக்காளர் இடாப்புகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் இருந்து விண்ணப்பங்களை இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும் அல்லது தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்

தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்கு முன்னர் அந்தந்த மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றுள்ளது.

## அவமானப்படுத்தும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தமை ஆங்கிலம் பேசத் தெரியாவர்கள் சிங்களம் மட்டுமே தெரிந்தவர்கள் பதவிக்குவரும் வகையிலான மாற்றம் நிகழ்ந்துள்ளதாக அவர் தெரிவித்த கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. கிராமப்புறச் சிங்களவர்களை அவமதிக்கும் வகையில் அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இதனை அடுத்து தனது தரப்பு விளக்கத்தை சந்திரிகா நேற்று வழங்கினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜே.வி.பியை அவமதிக்கும் எந்த எண்ணமும் எனக்கு இருக்கவில்லை. உண்மையில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டுள்ள குடும்பங்களில் இருந்து வருவோரை நாம் அவ்வாறு அவமானப்படுத்துவதில்லை. எனது வாழ்நாள் முழுவதும் அவர்களை ஏற்றிவடுவதற்கே நான் முயற்சித்துள்ளேன்.

அன்று பண்டாரநாயக்கவின் நினைவு தினம். நான் அஞ்சலி செலுத்துவதற்காக சென்றபோது செய்தியாளர்கள் என்னைப் பின்தொடர்ந்தனர். நான் வாகனங்களில் செல்கின்றபோதும், அஞ்சலி செலுத்தச் சென்றபோதும் அவர்கள் தொடர்ச்சியாக பின்தொடர்ந்து கேள்விகளைக் கேட்டார்கள். அவ்விதமான தருணங்களில் நான் பதிலளிப்பதில்லை. தொடர்ச்சியாக தொடர்ந்து தொந்தரவு செய்தார்கள்.

அப்போது புதிய ஆட்சியாளர் பற்றி கேட்டார்கள். அதற்கு நான் அவர்கள் பதவிக்கு வந்துள்ளார்கள் என்ன செய்கின்றார்கள் என்று பார்ப்போம் என்றேன். தொடர்ந்தும் என்னை வாகனத்தில் ஏறியதும் கேள்வி கேட்டார்கள் அதன்போது அவர்கள் சிறந்தவர்கள் என்று தான் கூறினேன். அதனை அவர்கள் வெட்டி அகற்றிவிட்டார்கள்.

அத்துடன் குறித்த தினம் 26ஆம் திகதி செப்டெம்பர் என்பதால் கிராமத்தில் ஆங்கிலம் பேசத் தெரியாவர்கள் சிங்களம் மட்டும் தெரிந்தவர்கள் பதவிக்குவரும் வகையிலான மாற்றம் நிகழ்ந்த தினம் என்று கூறினேன். அதனை அவமானப்படுத்துவதற்காக கூறவில்லை. கிராமத்தில் ஆண் பிள்ளைகளை பெண்பிள்ளைகளை பொடியன், பெட்டை என்பார்கள் அதுபோன்று தான் ஜே.வி.பி.க்கு எனது விருப்பினை வெளிப்படுத்தும் வகையில் அந்தக் கருத்தினை கிராமத்து வழக்கத்தில் கூறினேன். அவ்வளவுதான். நான் செல்வந்தர்களின் வளர்ச்சியை தடுப்பதற்காகவே 20 வருடங்களாகச் செயற்படுகின்றேன். நான் பொறாமைப்படுவதாக கூறுகின்றார்கள். அது தவறானது என்றார்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை கடற்படையை குற்றம்சாட்டுவதை தமிழக முதல்வர் ஸ்டாலின் நிறுத்தவேண்டும்

## என்.வி.சுப்பிரமணியம் காட்டம்



இலங்கை கடற்படையையும் அரசாங்கத்தையும் குற்றம் சாட்டுவதை தமிழக முதலமைச்சர் கைவிட வேண்டும் என அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் என்.வி.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது:

தமிழக முதலமைச்சருக்கு நான் ஒரு கோரிக்கையை முன்வைக்கின்றேன். 2016ஆம் ஆண்டுடெல்லியில்நடைபெற்றபேச்சில்எடுக்கப்பட்ட உடன்படிக்கையை படித்துப் பாருங்கள். அதன் பின்னர் நீங்கள் இழுவைமடி தொழிலை செய்வதாக நிறுத்துவதா என்ற நிலைக்கு வர முடியும்.

எமது நாட்டிலே உள்ள கடற்படையையும் அரசாங்கத்தையும் குறை சொல்வதை விட்டுவிட்டு வெளிநாட்டு அமைச்சு இணையதளத்தில் இருக்கின்ற அந்த சட்டத்தை படித்துவிட்டு அதற்கு தகுந்தாற் போல் செயல்பட வேண்டுமே தவிர, தமிழ்நாட்டு மீனவர்களை காலத்திற்கு காலம் ஏமாற்றுவதை போன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பது மிகவும் ஒரு கவலைக்குரிய விடயம். இதனை அறியாத தமிழ்நாட்டின் மீனவர்களும் உங்களை நம்பி ஏமாந்துகொண்டி ருக்கின்றார்கள். - என்றார்.

(05)

# அஸ்வின் மற்றும் விராஜின் நினைவேந்தல் நிகழ்வுகள்



மறைந்த ஊடகவியலாளரும் கேலிச்சித்திர கலைஞருமானஅஸ்வின்சுதர்சனின்நினைவேந்தல் நிகழ்வும், தேசிய பற்றாளர் விராஜ் மென்டிஸின் அஞ்சலி நிகழ்வும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

யாழ். ஊடக அமையத்தில், அமையத்தின் தலைவர் கு.செல்வக்குமாரின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்,

அஸ்வினின் திருவுருவப்படத்துக்கு அஸ்வினின் பெற்றோர் மலர்மாலை அணிவித்தனர். தொடர்ந்து தேசிய பற்றாளர் விராஜ் மென்டீஸின் திருவுருவப் படத்துக்கு யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி கலாநிதி ரகுராமும் ஊடக கற்கைகள் துறை தலைவர் பூங்குழலியும் மலர்மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து அஸ்வின் மற்றும் தேசிய பற்றாளர் விராஜ் மென்டிஸ் ஆகியோரின் நினைவுரைகள் இடம்பெற்றன.

அடுத்து, அஸ்வினின் குடும்பத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் ஊடக கற்கைநெறியை தொடரும் மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட தேவையுடைய மாணவருக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.(05)

# பிரான்ஸில் இருந்து யாழ்ப்பாணம் வந்தவர் பரிதாபகரமாக இறப்பு

பிரான்ஸ் நாட்டில் இருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த நபர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துக் கொண்டுள்ளார்.

இருபாலை பகுதியை சேர்ந்த 58 வயதுடையவரே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைசேர்ந்தஇந்த நபர்பிரான்ஸ்நாட்டில்நீண்டகால மாக வசித்து வந்த நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் மீண்டும் யாழ்ப்பாணம் வந்திருந்தார். இந்நிலையில் சனிக்கிழமை தனது வீட்டில் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார்.

மரண விசாரணையின்போது, அவர் மன விரக்தியில் உயிரிழந் துள்ளமை தெரியவந்துள்ளது. (05)

# புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் ஐவர் கைது

பெரிய நீலாவணையில் உள்ள வீடொன்றில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் கைதான ஐந்து சந்தேக நபர்களையும் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்யுமாறு கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் ஏ.எல்.நதீர் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு அம்பாறை, பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பு பகுதியில் உள்ள வீடொன்றில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் ஐவர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

சிலர் வீடொன்றில் புதையல் தோண்டுவதாக பெரிய நீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.எஸ்.கே.வீரசிங்க தலைமையிலான பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பில் சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

அதனையடுத்து, கைதான சந்தேக நபர்களை கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய வேளையில் சந்தேக நபர்களை இன்று திங்கட்கிழமை வரை தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டிருந்தார்.

கைதான ஐவரும் 28 - 30 வயதுக்குட்பட்டவர்கள் என்பதுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் நால்வர் மட்டக்களப்பு மாவட்டம், செங்கலடி பகுதியை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய பூஜை பொருள்கள், மண்வெட்டி, அலவாங்கு முதலான பொருள்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.10.2024இல் வெளியிடப்பெற்றது